முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 777**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**14.11.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான சூட்சுமமே அரங்கா போற்றி
ஞானபண்டிதன் என் சக்தியே தேசிகா போற்றி
வானவர்கள் மெச்ச மாதர்மத்தை
வையகத்தில் மக்களுக்கு அருளி காத்தருளும் அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரை ஆசி
ஆற்றல்தந்து அரங்கன் சக்திக்குள்ளே
ஆறுமுகன் அனுதினம் அற்புதத்தை நிகழ்த்திவர
3. வருகின்ற அரங்கன் மலரடியும் ஞான உபதேசமும்
வையகத்தில் ஞானமாக உலகோர் ஏற்றுவர
தருகின்ற தர்மத்தின் பங்களிப்பாலே
தரணியோர் அரங்கன் தர்மத்தில் உதவி வருகவே
4. வருகவே புண்ணியவான்களாகி இனிதே
வையகத்தை காக்கும் சக்திகளாக மாறுவர்
தருகின்ற அரங்கன் உபதேசமே
தவராஜனின் சன்மார்க்கமே இந்த உலகை மீட்கும்
5. மீட்கின்ற உயர் மார்க்கமாகும்
மேலான ஞான வழிகாட்டி
மாற்றங்களை அரங்கன் செய்துவர
மாதவசி அரங்கன் பெயரிலே உலகமெங்கும்
6. உலகமெங்கும் அன்னதானசேவை பெருகி
உயர்வாக மக்களை தயவோடு சூட்சும சக்திகள் வந்து வழிநடத்தி
நடத்தியே கலியுகம் தானும்
தன் இடர்களை அகற்றி
7. ஞானபண்டிதன் என் அருளால்
ஞானயுக  மாற்றமாக காணக் கூடும்
அரங்கன் வழி வரவர
அற்புதங்கண்டு உலகே மாறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–